# குறைந்த மற்றும் மத்திய வருமான நாடுகளில் கைப்பேசியின் பொருளாதார தாக்கம்.

**ஊடக வெளியீடு**

கிராமப்புறங்கள் நகர்ப்புறங்களைப்போல தகவல் தொடர்பாடலில் தொடர்புறுத்தப்படாமல் ''தகவல் குறைவு'' ஆனவையாகவே உள்ளன. கிராமப்புறங்களில் தகவல்களுக்காக அதிகளவான கேள்வி இருக்கின்றது. ஆனால் தகவல் தேடல் என்பது அதிகளவான செலவை உள்வாங்கவல்லதாக உள்ளது. உதாரணமாக போக்குவரத்து தொடர்பான செலவினங்களை தகவல் தேடலுக்கான ஒருவித செலவினமாக கொள்ளலாம்.
தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்பங்கள் தகவலறிதலுக்கு இடைப்பாலமாக உள்ளது. தகவல் தொடர்பாடல் தொழினுட்பங்களில் கைப்பேசியானது அதிவேகமான தகவல் பரப்பு ஊடகமாக உள்ளது. குறைந்த மற்றும் மத்திய வருமான நாடுகளை பொறுத்தவரையில் கைப்பேசியானது அதிகளவில் பாவனையிலுள்ள தொடர்பாடல் தொழினுட்பமாக உள்ளது. இயலளவில் உள்ள பெருமளவான வலுவான அளவைசார் ஆய்வுகள் மூலமாக கிராமப்புறங்களில் கைப்பேசி பாவனையின் பொருளாதார தாக்கங்களை தனிப்பட தெளிவுற செய்வதற்காக ஒரு முறைப்படுத்தப்பட்ட ஆய்வு செயற்படுத்தப்பட்டது. அதன்மூலம் மதிப்பிடப்பட்ட விடயங்கள் பின்வருமாறு:

- அதிகரித்த கைப்பேசி சமிக்ஞைகளின் செயலெல்லை இயலளவு
- கைப்பேசி பாவனை தொடர்பாளர் இடைமுக அலகு பாவனை.
- கைப்பேசிகளை மையப்படுத்திய சேவைகளின் பாவனை

## பிரதான அவதானிப்புகள்

1. சந்தையில் உயர்மட்ட பயனுறுதியை தோற்றுவிக்கும் கிராமப்புறங்களின் கைப்பேசி செயலெல்லை அளவுகள்.

   கேள்வி மற்றும் நிரம்பலை இணைவான நிலையில் பேணுவதனூடாக வாடிக்கையாளர் மற்றும் உற்பத்தியாளர்களின் நலன்களை ஒருமுகமாக பேணுதல். விலைத்தளம்பல்களை நெறிப்படுத்தல் விரைவில் பழுதடையக்கூடிய வேளாண்மை உற்பத்தி மீன் உற்பத்தி கழிவுகளை குறைத்தல்.

2. பொருளாதார விருத்திக்கு பங்களிக்கின்ற கிராமப்புறங்களின் கைப்பேசி செயலெல்லை.

   கைப்பேசி செயலெல்லை விரிவாக்கமானது வேலைவாய்ப்புகளுக்கான சாத்தியக்கூறுகளை அதிகரிக்கவல்லது. அதன்மூலம் செயலாக்க வருமானமும் செலவினங்களும் தாக்கங்களுக்கு உள்ளாகிறது.

3. கவர்தல் மூலமான சந்தையைவிட உந்துதல் மூலமான சந்தையின் தாக்கம் குறைவாக இருத்தல்.

   பாவனையாளர்கள் ''கவர்தல்'' மூலமாக தகவல்களை பெற கைப்பேசி பாவனையை அதிகரிக்கும் அதே நேரம் வழங்குனர்கள் தகவல்களை ''உந்துதல்'' மூலமாக தகவல் அளித்தல் செயற்பாடுகளை மேற்கொள்ளல் போன்ற நடவடிக்கைகள் எடுத்துக்காட்டுகள் மூலம் தாக்கங்கள் அறியப்படுகிறது.

## ஆய்வு

**முறைப்படுத்தப்பட்ட ஆய்வு பற்றி**

துல்லியமாக வரையறுக்கப்பட்ட ஆய்வுக் கேள்விக்கான வலுவான சான்றுகள் தொடர்பான இனங்காணல் தெரிவுசெய்தல் மற்றும் விமர்சன மதிப்பீடு என்பன முறைப்படுத்தப்பட்ட ஆய்வில் உபயோகப்படுத்தப்படுகின்ற கடுமையான ஸ்திரமான செயலாக்கமுறைகள் மூலமாக உறுதிப்படுத்தப்படுகிறது. விளைவுகள் மற்றும் அவற்றிற்கான காரணங்களை பக்கச்சார்பின்றி மதிப்பிடுதல் இம் முறைப்படுத்தப்பட்ட ஆய்வின் முக்கிய நோக்கமாகும்.
இம் முறைப்படுத்தப்பட்ட ஆய்வின் மூலம் 9082 கல்வி ஆய்வுகளை ஆராய்ந்து அவற்றில் மிக வலுவான அளவை சார் கல்வி ஆய்வுகள் கூட்டிணைப்புக்கு தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

**செயலெல்லை விரிவாக்கத்தின் தாக்கங்கள்**

கிராமப்புற கைப்பேசி செயலெல்லை மூலம் பரந்த இடங்களுக்கிடையிலான சந்தைக்கேள்வி மற்றும் நிரம்பலின் சரியளவிலான இணங்கல் மூலமாக மிக பயனுறுதி வாய்ந்த சந்தையை உருவாக்கமுடியுமாக இருந்தது. இதன் மூலம் வாடிக்கையாளர்களும் வழங்குனர்களும் நன்மையடைவது மறுக்கமுடியாதது. விரைவில் பழுதடையக்கூடிய மீன் உற்பத்தி போன்ற வேளாண்மை உற்பத்திகள் தொடர்பில் சந்தை தெளிவுகளின் ஊடாக பாரியளவான கழிவுக்குறைப்பானது செயற்படுத்தப்பட்டுள்ளது. கிராமப்புற செயலெல்லை அளவு மூலம் நேரடியான மற்றும் மறைமுகமான வேலைவாய்ப்பு வசதிகளில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. தென்னாபிரிக்க கிராமப்புறங்களில் ஒரு வருடத்தில் 33.7 ஆக வேலைவாய்ப்பிற்கான சாத்தியக்கூறு அதிகரித்துள்ளமையானது இதற்கு தகுந்த உதாரணமாகும். கிராமப்புற கைப்பேசி செயலெல்லை பங்களிப்பு மூலம் செயலாக்கவருமானம் மற்றும் செலவினங்கள் அதிகரித்துள்ளன. கைப்பேசி செயலெல்லை விளைவுகள் தொடர்பில் பேரு நாட்டின் 6 வருட ஆய்வுகளின் அடிப்படையில் செலவினங்கள் 44.6 இனால் அதிகரித்துள்ளது.

**அதிகரித்த செயலெல்லையின் தாக்கங்கள்**

கைப்பேசி பாவனை மற்றும் ஞஜஆ அட்டைகளின் கொள்வனவு முதலானவற்றின் ஆய்வு முடிவுகள் செயலெல்லை ஆய்வுகளின் முடிவுகள் போல வலுவானவையாக அமையவில்லை.
கைப்பேசி பாவனையின் பரவலின் தாக்கமானது நம்பிக்கைக்குரிய சான்றுகளின் மூலமாக ஒரு ஆய்வின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது: கைப்பேசி ஒன்றினை கொள்வனவு செய்வதானது முதலீட்டு நுகர்வின்படி 11 – 17 வரையான வளர்ச்சி வீதத்தை எட்டியுள்ளது. இதன்

மூலம் குறிப்பிடப்படுவதாவது கைப்பேசியானது உயர் வருமானத்திற்கும் அதே நேரம் உயர் நுகர்விற்கும் பங்களிப்பு செய்துள்ளது. எப்படி இருப்பினும் இந்த கல்வி ஆய்வானது பிலிப்பைன்ஸ் நாட்டின் ஒரு வறுமை மிகுந்த பண்ணை குடியிருப்புகளில் மேற்கொள்ளப்பட்டது. தாக்கங்களின் தன்மையானது நாடுகளிடையேயும் குடியிருப்பு பிரிவுகளிடையேயும் ஒரே மாதிரியான தன்மையிலேயே காணப்படுகின்ற போதிலும் கைப்பேசி பாவனையின் தாக்கங்களின் பரிணாமம் வேறுபட்டு காணப்படுகிறது.

**கைப்பேசிகளை மையப்படுத்திய சேவைகளின் பாவனை மூலமான தாக்கங்கள்**

கைப்பேசிகளை மையப்படுத்திய சேவைகளது பாவனையின் மூலமான தாக்கங்களின் சான்றுகள் வலுவற்றவையாகவே காணப்படுகின்றது. இவ் ஆய்வானது வேளாண்மை பற்றிய விலை நிலவரம் பற்றிய தகவல்களை இலவசமாகவோ சிறு கட்டணத்துடனோ வழங்குகின்ற கைப்பேசிகளை மையப்படுத்திய சேவைகளை ஆராய்ந்துள்ளது. இறுதிக்கட்ட ஆராய்ச்சிக்கு உட்படுத்தப்பட்ட ஆய்வுகளில் குறித்த ஒரு ஆய்வு தெளிவான நேர்தாக்கத்திற்கான சான்றுகளை வெளிப்படுத்தியுள்ளது. பேரளவான குறுஞ்செய்திகளின் ஆக்க எதிர்ப்பாடு ஒத்திவைப்பின் மூலமாக இவ் ஆய்வு பயனடைந்துள்ளது. இக்காலப்பகுதியில் விலைத்தளம்பல்கள் அதிகரித்திருந்தது. அதன் சுவடுகளை சமவாய்ப்புடனான கட்டுப்பாடுகள் மூலம் விளைவற்றதாக்கி இருந்தது. ஆய்வு மேற்கொண்ட காலம் குறுகியதாக இருந்தமையாலும் குறுங்காலத்திற்கு அச் சேவைகள் இலவசமாக வழங்கப்பட்டமை காரணமாகவும் அச் சேவையின் பயன்கள் பற்றிய தெளிவானது எட்டப்படாமல் இருந்தது.

## முடிவு

ஆய்வு அடிப்படையில் முன்பு செயலெல்லைக்குள் உட்படாதிருந்த பகுதிகளில் கைப்பேசி செயலெல்லையை விரிவுபடுத்துவதன் மூலம் நேர் பொருளாதார தாக்கங்களை பெற்றுக்கொள்ளலாம் என்ற சான்றை பெறமுடிந்தது. கைப்பேசி மற்றும் ஞஐஆ பாவனையின் மூலமான மற்றும் கைப்பேசிகளை மையப்படுத்திய சேவைகள் மூலமான ஆய்வு முடிவுகள் வலுவின்றியே காணப்படுகின்றது.

கைப்பேசி வலையமைப்பின் அறிமுகத்தால் நேர் பொருளாதார பங்களிப்புகள் உருவாக்கப்படுகிறது எனும் பேரளவிலான கல்வி ஆய்வானது இவ் முறைப்படுத்தப்பட்ட ஆய்வினை முழுமையடையச் செய்கின்றது. வலையமைப்பின் விரிவாக்கத்தினால் பிரதேசங்களுக்கிடையிலான தொடர்பாடல் மற்றும் ஒருங்கிணைத்தல் செயற்பாடுகளின் சாத்தியகூறுகளின் மூலம் ஊடக பாவனைக்கான மானிய ஏற்பாடுகள் இன்றியோ அல்லது விசேடமாக வடிவமைக்கப்பட்ட தகவல் சேவையின் தேவை இன்றியோ பொருளாதார பலனை பெற முடியும் என இவ் ஆய்வு தெளிவுபடுத்துகின்றது. இதன்மூலம் ஊடகங்களும் சேவைகளும் தாக்கத்தை ஏற்படுத்தவில்லை என கூறமுடியாது. ஆனால் அவற்றினால் ஏற்படும் தாக்கங்களை உறுதிப்படுத்தி தெளிவுபடுத்த முடியாது.

ஏனைய பிற பேரளவான கல்வி ஆய்வுகளின் அடிப்படையில் நுண்ணாய்வு செய்யும்போது கைப்பேசி சேவைகள் நேர் பொருளாதார தாக்கங்களை ஏற்படுத்தவல்லது எனும் முடிவுக்கு வரக்கூடியதாக இருக்கும். இவ் ஆய்வானது பயனுறுதி வரிவடிவ முகாமைத்துவம் மற்றும் அடிப்படை நிலைய உருவாக்கத்திற்கான வாய்ப்பு என்பவற்றின் ஊடாக கிராமப்புறங்களில் கைப்பேசி சேவைகட்கான மேலதிக வரி விதிப்புகளிலிருந்து விலக்குதல் மற்றும் வலையமைப்பு முதலீடுகளை எளிதாக்குதல் போன்றவற்றிற்கான கொள்கை பரிந்துரைகளில் உறுதியாக துணைநிற்கிறது. இவை கிராமப்புற உதவித்திட்டங்களின் பலனை கணக்கிடுவதற்கான அடிப்படைகளையும் வழங்குகிறது.

**ஒப்புரை**

“குறைந்த மற்றும் மத்திய வருமான நாடுகளின் கிராமப்புறங்களில் உள்ள பண்ணை மற்றும் பண்ணை சாராத வணிக மையங்களின் பொருளாதார மற்றும் உற்பத்தி வெளியீடுகளை அளவிடுவதற்கான கைப்பேசியின் பாவனை” என்ற முறைப்படுத்தப்பட்ட ஆய்வானது சர்வதேச தொடக்கநிலை தாக்கத்திற்கான மதிப்பீடு (3ie) என்ற நிறுவனத்தின் நிதியுதவி அடிப்படையில் உருவாக்கப்பட்டது.

## எழுத்தாளர்கள்

றொகான் சமரஜீவ – தலைமை – LIRNEasia ’ rohan@lirneasia.net
கிறிஸ்தோப் ஸ்ரோக் - சிரேஷ்ட ஆய்வாளர் - Research ICT Africa| cstork@researchICTafrica.net
நிலுஷா கப்புகம – ஆய்வு முகாமையாளர் - LIRNEasia | Nilusha@lirneasia.net

**Computer copies / Softcopies of this document can be requested from LIRNEasia. Email: Suthaharan@lirneasia.net**